கூடுதல் மாவட்ட அமர்வு நீதிமன்றம், மயிலாடுதுறை.

முன்னிலை:- திரு.பி.இளங்கோ, பி.எஸ்.சி., எம்.எல்.,

கூடுதல் மாவட்ட நீதிபதி, மயிலாடுதுறை.

| | | |
|---|---|---|
| அ.சா. 7 | நாள்: 30.06.2022 | |
| அமர்வு வழக்கு எண். | 42/2020 | |
| பெயர் | முகுந்தன் | த/பெ |
| வயது | | தொழில் |
| ஜாதி | | மதம் |
| கிராமம் | | தாலூக்கா |

சாட்சி அழைக்கப்பட்டு சத்தியபிரமானம் செய்யப்பட்டு முதல் விசாரணை செய்யப்பட்டார்.

முதல் விசாரணை:

நான் தற்போது ஆணைக்காரன் சத்திரம் காவல் நிலையத்தில் 2 ஆம் நிலை காவலராக பணிபுரிந்து வருகிறேன். இவ்வழக்கு சம்பவ காலமான 2018 ல் நான் ஆயூதப்படைப்பிரிவில் பணிபுரிந்தேன். குற்றப்பிரிவு சம்மந்தமாக அமைக்கப்பட்ட சிறப்பு குழு மயிலாடுதுறையில் நானும் இருந்தேன். 14.03.2016 அன்று திருவெண்காடு குற்ற எண்.99/2016 வழக்கில் தப்பித்த எதிரி அகோரம் என்பவர் திருவெண்காடு சம்பாக்கட்டலை மாந்தோப்பில் மறைந்திருந்ததாக தகவல் கிடைத்தது எங்கள் குழுவிற்கு ஆய்வாளர் முருகவேல் தலைமை ஏற்றார். அந்த தகவலின் பேரில் மேற்கொண்ட இடத்திற்கு எங்கள் குழுவை சேர்ந்த நானும் த.கா. கருநாநிதி, த.கா.ராமமூர்த்தி, காவலர்கள் தெய்வசிகாமணி, சிவராமன், ஸ்டாலின் ஆகியோர் மேற்படி ஆய்வாளர் தலைமையில் சென்றோம். அந்த மாந்தோப்பிற்கு நாங்கள் சென்றபோது எதிரி இருந்தார். காவல்துறையை சேர்ந்த எங்களை பார்த்த உடன் எதிரி அங்கிருந்துதப்பி ஓடமுயற்ச்சி செய்தார். அவரை நாங்கள் பிடித்தபோது அவரதுகையில் ஒரு பை இருந்தது அந்த பையை பிரித்துப்பார்த்தபோது அதில் ஒரு ஆட்டோ பிஸ்டல் இருந்தது மேலும் அதில் 2 நாட்டு வெடிகுண்டு இருந்தது. அவைகளை கைப்பற்றி எதிரியை அழைத்துக்கொண்டு திருவெண்காடு காவல்நிலையம் சென்றோம். இதுக்குறித்து ஆய்வாளர் விசாரித்தார்.

குறுக்கு விசாரணை

மேற்கூறிய காவல்துறையை சேர்ந்தவர்களின் பெயர்களை ஆய்வாளர் தனது தனி அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார் அதில் எனது பெயரும் உள்ளது. பொறையார் காவல் ஆய்வாளருடன் நான் பணிசம்மந்தமாக செல்வதற்கு முன்பாக காவல் கண்காணிப்பாளர்

அல்லது DSP அவர்களிடம் அனுமதி பெற்றீர்களா என்றால் இல்லை. ஆய்வாளர் வாங்கியிருப்பார். ஆய்வாளர் ஒரு தனி வாகனத்திலும் காவலர்களாகிய நாங்கள் ஒரு டெம்போவிலும் சம்பவ இடத்திற்கு சென்றோம். அப்போது காவலர்கள் அனைவரும் சிவில் உடையில் சென்றேம். நாங்கள் சம்பவ இடம் சென்றபோது பகல் 12.00 மணியிருக்கும். திருவெண்காட்டில் எங்கு எங்கு தேடிவிட்டு சம்பவஇடத்திற்கு சென்றீர்கள் என்றால் முதலில் சம்பவ இடத்திற்கு அருகில் உள்ள எதிரியின் வீட்டிற்கு சென்று பார்த்தோம் அதன் பின்னர், அங்கு எதிரி இல்லை என்பதால் சம்பவ இடத்திற்கு சென்றோம். எதிரியின் வீட்டிலிருந்து சம்பவ இடத்திற்கு செல்வதற்கு சுமார் 15 நிமிடங்கள் ஆகியிருக்கும். மேற்கூறிய வழக்கு திருவெண்காடு காவல்நிலைய வழக்காகும். திருவெண்காடு காவல் நிலையத்திலிருந்து காவலர்களை அழைத்து சென்றீர்களா என்றால் இல்லை. திருவெண்காடு காவல்நிலைய குற்ற எண். 99/2016 வழக்கு விபரங்கள் தெரியுமா என்றால் தெரியாது. மாந்தோப்பில் எந்தப்பகுதயில் எதிரி இருந்தார் என்றால் மாந்தோப்பின் கிழக்கு பகுதியில் இருந்தார். எங்களை பார்த்த உடன் தப்பி ஓடி முயன்ற எதிரியை யார்யார் பிடித்தீர்கள் என்றால் ஆய்வாளரும் காவலர்கள் ராமமூர்த்தி, கருநாநிதி அகியவர்களும் பிடித்தார்கள். அப்போது எதிரியுடன் வேறு யாரும் இல்லை. நாங்கள் எதிரியை பிடித்துக்கொண்டு வந்தபின்னர் 10,15 பேர் அந்த இடத்திற்கு வந்தார்கள் அந்த இடத்தில் ஆய்வாளர் எதிரியை கைது செய்தார். அப்போது எதிரியிடம் ஆய்வாளர் ஒரு ஒப்புதல் வாக்குமூலம் வாங்கினார். அதில் யார்யார் கையெழுத்து போட்டார்கள் என்றால் நானும் எங்கள் குழுவிலிருந்த ஒருசில காவலர்களும் போட்டோம். ஆய்வாளரின் தனிஅறிக்கையில் யார்யார் கையெழுத்து போட்டார்கள் என்றால் தெரியாது. நான் சம்பவ இடத்திற்கு செல்லவில்லை என்றும் உயர் அதிகாரிகளின் வேண்டுதலின்பேரில் நான் பொய்சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை

இல்லை.